விரைவில் 'பதிவுகள்' இணைய இதழ் புதிய வடிவமைப்பில் ......

Written by - வ.ந.கி -
Monday, 15 February 2021 04:13 - Last Updated Monday, 15 February 2021 04:24

தற்போது வெளியாகும் 'பதிவுகள்' இணைய இதழ் ஜூம்லா தொழில் நுட்பத்தின் (JOOMLA) பழைய பதிப்பில் (Version 1.5.26) இயங்கிக் கொண்டிருக்கின்றது. ஜூம்லா தொழில்நுட்பத்தின் புதிய பதிப்புக்கு (Version 3.94) மாற்றுவது பெரியதொரு வேலை. பழைய பதிப்பிலுள்ள கட்டமைப்பு புதிய பதிப்பில் பல மாற்றங்களுக்கு உள்ளாகியுள்ளது. பழைய கட்டமைப்பிலுள்ள தரவுத்தளத்தை அப்படியே பாவிக்க முடியாது. புதிய பதிப்புக்கு மாற்றுவது இலகுவானதல்ல. அதே சமயம் புதிய ஜூம்லாப் பதிப்புக்கு மாற்றுவது காலத்தின் கட்டாயம். புதிய பதிப்புக்கு மாற்றுவதால் பல நன்மைகளுள்ளன.அவற்றிலொன்று அலைபேசிகளில் இலகுவாக வாசிக்கும் வகையிலான 'ரெஸ்பொன்சிவ் டெம்பிளேட்டை (Responsive Template) புதிய பதிவுகள் இணைய இதழின் வடிவமைப்பு கொண்டிருப்பதுதான். மேலும் புதிய வடிமைப்பில் பராமரிப்பது, பாதுகாப்பது எல்லாமே பல நன்மைகளைக் கொண்டுள்ளன.

girinav@gmail.com

1 / 1